
6 தொலைக்காட்சிகளில் விளம்பரப்படுத்தியதன் காரணமாக

# 108 ஆம்புலன்ஸ் சேவைக்கு தினமும் 30 ஆயிரம் அழைப்புகள் வருகிறது

## கருணாநிதி அறிக்கை

சென்னை, ஜன.13-

108 ஆம்புலன்ஸ் குறித்து 7 தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்யப்படுகிறது. இதன் மூலம் தினசரி 30 ஆயிரம் அழைப்புகள் வருகின்றன என்று முதல்-அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.



முதல்-அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

### 108 ஆம்புலன்ஸ் சேவை

ஒரு சில பத்திரிகைக்காரர்கள் தி.மு.க.வுக்கும்-கழக அரசுக்கும் விரோதமாக எந்த அளவிற்கு செய்திகளையெல்லாம் திரித்து வெளியிடுகிறார்கள் என்பதற்கு பல உதாரணங்களை எடுத்துக்காட்டி எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக வேறு சிலவற்றையும் எடுத்துக்காட்டிட விரும்புகிறேன்.

"தினமணி" நாளிதழ் கழக அரசுக்கு எதிராக தொடர்ந்து உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டு வருகிறது. 10-1-2011 தேதிய "தினமணி" இதழின் முதல் பக்கத்தில் எட்டு காலம் செய்தியாக "குடும்ப சேனல்களுக்கு கோடிகளில் விளம்பரம்" என்ற தலைப்பில் எழுதியுள்ள செய்தியில் - "108 இலவச ஆம்புலன்ஸ் சேவை" விளம்பரங்களுக்காக சன் மற்றும் கலைஞர் தொலைக்காட்சிகளுக்கு மட்டும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு விளம்பரங்கள் தரப்பட்டுள்ளன என்றும் - அந்த திட்டத்தை தொடங்கியதற்கு காரணமே சுயநலம்தான் என்பதை போலவும் எழுதப்பட்டுள்ளது.

### மத்திய அரசின் உதவியோடு

108 இலவச ஆம்புலன்ஸ் சேவையினால் பயன்பெறும் ஏழை எளிய தமிழ்நாட்டு மக்கள் அந்த திட்டத்தைப்பற்றி அன்றாடம் மனம் திறந்து பாராட்டுகிறார்கள். அது மத்திய அரசின் உதவியோடு செயல்படுகின்ற ஒரு திட்டமாகும். அந்த திட்டத்தினால் கழக அரசுக்கு மிகப்பெரிய பெயர் வருவதை ஒரு சிலரால் தாங்கி கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடுதான் அந்த கட்டுரை.

குந்தி தேவிக்கு முன்பாக தனக்கு குழந்தை பிறந்துவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்ட காந்தாரி அம்மி குழவியை எடுத்து அடிவயிற்றிலே குத்திக்கொண்டாள் என்று பாரதத்திலே ஒரு உபகதை உண்டு. அதைப்போல எப்படியாவது இந்த திட்டத்திற்கு ஒரு ஊனம் வந்துவிடக்கூடாதா என்று அந்த செய்தியை வெளியிட்டுள்ளது. ஒரு கோடி ரூபாய் இதுவரை விளம்பரமாக செலுத்தப்பட்டிருக்கிறதாம்! எத்தனை நாள் விளம்பரத்திற்காக இந்த ரூபாய்! அதைப்பற்றியோ, இந்த இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மட்டும்தான் இந்த விளம்பரம் தரப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களையெல்லாம் கெட்டிக்காரத்தனமாக அவர்கள் வெளியிடவில்லை.

### 6 டி.வி. நிறுவனங்களுக்கு

நான் உடனடியாக அதுபற்றிய முழுவிவரமும் எனக்கு வரவேண்டும் என்று கூறினேன். அவசர மருத்துவ ஊர்தி 108 இலவச சேவை திட்டத்தின் உதவி அதிக அளவில் ஏழை மக்களுக்கு கிடைத்திட வேண்டும் என்பதற்காக விளம்பரங்கள் பல்வேறு தொலைக்காட்சிகளுக்கும் அளிக்கப்படுகின்றன. சன், கலைஞர் தொலைக்காட்சிகளுக்கு மட்டுமல்லாமல்,பொதிகை, தூர்தர்ஷன், விஜய், மெகா, எஸ். எஸ்.மியூசிக் ஆகிய தொலைக்காட்சிகளுக்கும் அளிக்கப்படுவதாக கூறினார்கள். ஆனால் இந்த விவரங்களையெல்லாம் மறைத்துவிட்டு - சன், கலைஞர் தொலைக்காட்சிகளுக்கு மட்டும் விளம்பரம் தரப்பட்டதைப்போல செய்தி வெளியிட்டிருப்பது நியாயம்தானா?

விளம்பரம் செய்யப்பட்ட காரணத்தினால்தான் 108 ஊர்தியை அழைப்பவர்கள் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 14 ஆயிரம் என்பது தற்போது 30 ஆயிரமாக உயர்ந்துள்ளது. மக்கள் பயன்பெறுகின்ற ஒரு நல்ல திட்டத்திற்கு ஏதாவது குதர்க்கம் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு "தினமணி" வெளியிடுகிறது என்றால் எந்த அளவிற்கு அவர்களுக்கு இந்த ஆட்சியின் மீது குரோதம் இருக்கிறது என்பது புரிகிறதா அல்லவா?

### வலையில் சிக்கமாட்டார்கள்

இந்த செய்தியை பார்த்ததும் "தீக்கதிர்" நாளிதழுக்கு பொறுத்துக்கொள்ள முடியுமா? இதே செய்தியை வைத்து தலையங்கமே திட்டலாம் என்று அவசர அவசரமாக தமிழக அரசை கண்டித்து ஒரு தலையங்கமே 2 நாட்களாக எழுதிவிட்டார்கள். பிரதான எதிர்க்கட்சியோடு கூட்டணி வைத்துக் கொள்ள துடிக்கும் கட்சி அல்லவா?

மேலும் கிண்டலாக, மக்களுக்கு வசதி செய்து தரும் இந்த சேவைக்காக சன் மற்றும் கலைஞர் தொலைக்காட்சிகள் இலவசமாக சேவை செய்கிறார்களோ என்றும் எழுதியுள்ளது. பல திட்டங்களை பற்றி அரசின் சார்பில் விளம்பரங்கள் தீக்கதிர் இதழில் பலமுறை வெளியிடப்பட்டதே. அப்போதெல்லாம் தீக்கதிர் அந்த விளம்பரங்களுக்கு கட்டணம் தேவையில்லை என்றுதான் கூறியதா?

மேலும் தீக்கதிர் தலையங்கத்தில் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று முழக்கமிட்டவர்கள் எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்று மாறிவிட்டார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். இதிலே என்ன ஊழல்? அரசு ஆறு நிறுவனங்களுக்கு விளம்பரம் தருகிறபோது இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் தந்துள்ளது. அது ஊழலா? தீக்கதிர் கூட்டணி சேரத்துடிக்கும் அ.தி.மு.க. தலைவி ரூ.66 கோடிக்கு சொத்துக் குவித்து, வழக்கு விசாரணை நடைபெற்று கொண்டிருக்கிறதே, அது ஊழலாக தெரியவில்லையா? இதே கட்சிக்காரர்கள் ஜெயலலிதா சிறுதாவூரில் "தலித்" களுக்கு அரசின் சார்பில் தரப்பட்ட நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்து கொண்டதாக புகார்மனு கொடுத்து சிவசுப்பிரமணியம் கமிஷன் அமைக்கப்பட்டதே, அப்போது ஊழலாக தெரிந்தது, இப்போது உண்மையாக தெரிகிறதா? இப்படியெல்லாம் உண்மைக்கு மாறாக பொய் செய்திகளை உண்மை போல எழுதினாலும் இந்த திட்டத்திற்கு மக்களிடம் இருக்கின்ற செல்வாக்கை மறைத்திட முடியுமா? இந்த திட்டத்தின் வாயிலாக உயிர்பெற்ற ஏழையெளிய மக்கள் இவர்களின் சூது வலையில் நிச்சயமாக சிக்க மாட்டார்கள்!

### ரேஷன் கார்டு கேட்டு

11-1-2011 தேதிய "தினமலர்" நாளிதழில் "ரேஷன் கார்டு கேட்டு சாபம் விட்ட ஊனமுற்ற தம்பதி" என்ற தலைப்பில் ஒரு செய்தி வந்துள்ளது. மாடிப்படிகளில் இரண்டு மாற்றுத்திறனாளிகள் தங்கள் குழந்தையோடு இறங்கிவருவதை போன்ற படத்தை வெளியிட்டு, அவர்களுக்கு மூன்றாண்டு காலமாக ரேஷன் கார்டு தராமல், இழுத்தடித்து வருவதாக செய்தி வெளியிட்டுள்ளார்கள்.

இந்த செய்தியை நான் படித்தவுடன் துடித்துப்போய் செயலாளரை அழைத்து கடிந்துகொண்டதோடு, உடனடியாக இதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினேன். உடனடியாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு கொண்டு - மாவட்ட ஆட்சித்தலைவரும் விசாரித்து, முதலமைச்சர் அலுவலகத்திற்கு காலை 10.30 மணிக்கெல்லாம் "பேக்ஸ்" மூலமாக பதில் அனுப்பியிருக்கிறார்.

### காதல் திருமணம்

அதில், ரேஷன் கார்டு கிடைக்காத அந்த தம்பதியினர் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள் என்றும், காதலுக்கு பெற்றோர் அனுமதிக்கவில்லை என்றும், இருவரும் தற்போது முஸ்லிம் மதத்திற்கு மாறிவிட்டதாகவும், ரேஷன் கார்டு கேட்டு 9-2-2010-ல் மனு செய்ததாகவும், ஆனால் அவர்களுடைய பெற்றோர் பழைய குடும்ப அட்டைகளை கொடுக்க மறுப்பதாகவும் 10-1-2011 அன்றுதான் மக்கள் குறைதீர்க்கும் நாளில் மனு கொடுக்கிறார்கள்.

மனு மீது விசாரணை நடத்தியபோது 9-2-2010ல் அவர்கள் மனு கொடுத்ததற்கான எந்தப்பதிவும் இல்லை. இவர்களது பெற்றோர்களின் குடும்ப அட்டைகளில் இவர்கள் இரண்டு பேருடைய பெயர்களும் இடம்பெறவில்லை. எனினும் மாற்றுத்திறனாளிகள் என்பதால் 11-1-2011 காலையிலேயே புதிதாக குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே காலதாமதம் ஏற்பட்டிருக்குமேயானால், காரணமானவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் "தினமலர்" 3 ஆண்டு காலமாக ரேஷன் கார்டிற்காக அலைவதைப்போல செய்தி வெளியிடுகிறார்கள் என்றால் எந்த அளவிற்கு காழ்ப்புணர்ச்சி இந்த அரசின் மீது அவர்களுக்கு இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

### பெண் கமாண்டோ கலைப்பில்லை

மேலும் "தமிழக காவல் துறையில் மகளிர் கமாண்டோ படை கலைப்பு" என்று ஒரு செய்தி கொட்டை எழுத்துக்களில் சில ஏடுகளில் வந்துள்ளது. நாம்தானே காவல் துறைக்கு அமைச்சர்-நாம் எப்போது மகளிர் கமாண்டோ படையை கலைத்து கோப்பிலே கையெழுத்திட்டோம் என்று விசாரிக்க சொன்னேன். பெண் கமாண்டோ படைப்பிரிவை கலைப்பதற்கான எவ்வித ஆணையும் வெளியிடப்படவில்லை. கமாண்டோ பயிற்சி முடித்த பெண் கமாண்டோக்கள் தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகள், மாநகர, மாவட்ட சேமநலப்படைகளில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். எனவே இதுசம்பந்தமாக வெளிவந்த செய்திகள் உண்மைக்கு மாறானதாகும்.

சில ஏடுகள் தற்போதெல்லாம் செய்திகளை தங்கள் வசதிக்கு திசைதிருப்பக்கூடிய வகையில் வெளியிடுவதும் - அதுவும் இந்த அரசை குறை கூறக்கூடிய செய்திகள் என்றால், குதூகலத்தில் துள்ளிக்குதித்து, அதற்கு கண், மூக்கு வைத்து பூதாகாரமாக ஆக்கி முதல் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதும் நியாயம்தானா? பத்திரிகை தர்மம்தானா? என்ற கேள்விகள் பத்திரிகையாளர்களுக்காக அடுக்கடுக்கான சாதனைகளை நிறைவேற்றியவன் என்ற முறையில் என் மனதில் எழுவது நியாயந்தானே?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.